**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC –51/2024**

**வழக்கு சாட்சி : LW6(PW2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஐயப்பன் | தொழில் | : | ஓட்டுநர் |
| தந்தை பெயர் | : | கலியபெருமாள் | சமயம் | : | |
| கிராமம் | : | புதுக்கோட்டை | வயது | : | 50 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(1 ம் எதிரி ஆஜர். 3 ம் எதிரி ஆஜர் இல்லை .எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 13th day of March 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து வந்து வேன் ஓட்டி வருகிறேன். எனக்கு அ.சா.1 , பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரை உள்ளவர்களை தெரியாது. ஆஜர் 1வது என் அக்கா மகன் ஆவார். 3 வது எதிரி மணிகண்டனை தெரியாது. ( எதிரி ஆஜர் இல்லை). சுமார் 1 1/2, 2 வருடங்களுக்கு முன்பாக கலைச்செல்வி என்பவர் காலை 11.30 மணிக்கு போன் செய்து சதிஷ்குமாரை அன்னவாசல் காவல் நிலையத்தில் வைத்திருப்பதாகவும், உடனே காவல் நிலையம் போகச் சொன்னார். நானும், அங்கு சென்றேன். ஆஜர் எதிரியை காவல் நிலையத்தில் இருந்து அழைத்துச் செல்வதற்கு என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள் . நானும் கையொப்பம் போட்டேன் .தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆகும்.** என்னுடன் ஒப்புதல் வா்க்குமூலத்தில் சாட்சி பிரபாகரன் என்பவரும் கையொப்பம் போட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

கடந்த 12.05.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும், பிரபாகரன் என்பவரும் கேட் அருகில் நின்று கொண்டிருந்ததகாவும் அப்போது அன்னவாச்ல போலிசார் அங்கு வந்த ஒரு நபைர விசாரித்ததாகவும், அந்த நபர் ஆஜர் எதிரி என்றும், எங்கள் இருவர் முன்னிலையில் தானாக முன்வந்து தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் , அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சாட்சி பிரபாகரனும் அதே இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் போட்டதாகவும், ஆஜர் எதிரி எனது அக்கா மகன் என்பதால் அரசு தரப்பில் இருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை - இல்லை.</u>**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.</u>**